# தேசியம்
THESIYAM ජේසියම්
www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 51 | 10.05.2023 (புதன்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00


## தமிழர் இனப்படுகொலையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வடகிழக்கு தழுவியரீதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகத்தின் ஆரம்பநாளான இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் வீட்டிற்கு செல்லும் பிரதான சந்தியில்

05

## தொடர்ந்து வேட்டையாடப்படும் தமிழர்களின் உரிமைகள்!

### நாடாளுமன்றத்தில் முழங்கிய சிறிதரன் எம்.பி



தமிழ் மக்களின் குடிப்பரம்பலை அடியோடு அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் முன்னெடுப்பதை சிங்கள இனவாத அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் எச்சரித்துள்ளார்.

05

## தலைவர் பிரபாகரனின் வழியிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி! கஜேந்திரன் கூறுகின்றார்!



05

## இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஜனாதிபதி சந்திப்பு!

### எடுக்கப்பட்டுள்ள முக்கிய தீர்மானம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை நாட்களில் நடக்கவுள்ள சந்திப்புகளில் வடக்கு, கிழக்கு





05

## தமிழ்ழ கோரிக்கைக்கு முழுக்கு போடவே

### சிங்கள - பௌத்த மயமாக்கல்: சுரேஷ் பிரேமச்சந்திரன்


"மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சி முன்வைக்கப்படாமலிருக்க வடக்கின் மக்கள் தொகையில் 25 சதவீதம் சிங்களவர்களாக இருக்க வேண்டும் என அரச மற்றும் இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்து அதற்காகச் சிங்கள பௌத்த மயமாக்கலை நடைமுறைப்படுத்துவதாக



05

## ஹோட்டல் அறைக்குள் நடந்தது என்ன!

### மாணவியின் மரணம் தொடர்பில் வெளியான வாக்குமூலம்



05

களுத்துறை ஹோட்டல் ஒன்றின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்த பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர், சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். ஹோட்டலின் மூன்றாவது மாடியில் இருந்து மாணவி குதித்து தற்கொலை செய்து கொண்டதாக சந்தேகநபர் கூறியதாக விசாரணை நடத்திய மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர்



05


## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை அச்சுறுத்திய இராணுவம்!

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் வடக்கு கிழக்கு தழுவியரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டத்தை சாவகச்சேரி பகுதியில் இராணுவத்தினர் புகைப்படமெடுத்து அச்சுறுத்தும் பாணியில்

**முள்ளிவாய்க்கால் நினைவு மாதம் என்பதால் முள்ளிவாய்க்கால் சம்பந்தப்பட்ட உங்களது ஆக்கங்களை எமக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வையுங்கள்...!**

**E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339**

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com






















## இதனை செய்ய முன்வருவாரா ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க...?

**"நாம் முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். இது தொடர்பில் பேச்சு நடத்தி வருகின்றோம். இது குறித்து இவ் வருட இறுதிக்குள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பெரும்பான்மை சிங்கள மக்களையும் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களையும் பாதுகாத்து முன்னோக்கி செல்ல வேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இனப்பிரச்சனை விடயத்தில் தூரச்செல்வதால் எந்த பயனும் இல்லை என்று நான் தமிழ் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமாயின் தயவுசெய்து இந்த பொறிமுறைக்குள் வந்து, விசேடமாக, பாராளுமன்றத்தில் நாம் அனைவரும் அரசாங்கமாக இணைந்து செயற்பட முன்வரவேண்டும்."**

கொழும்பில் நிகழ்ந்த ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தில் சூம் எனப்படும் மெய்நிகர் வழியாக உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் ஒரு முக்கியமான கருத்துத் தான் இது!

"மேலும், இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான உடன்பாடு, இந்த ஆண்டு எட்டப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்" என்றும் ஜனாதிபதி தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கருத்துக்கள் சுட்டிக்காட்டும் விடயம் தான் என்ன?

ஒரே வரியில் சொல்வதானால், தமிழ் முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, சாத்தியமான அளவில், பரந்த அடிப்படையில் தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு அவர் முயற்சிக்கின்றார் என்றுதான் கருதவேண்டும் - கருதமுடியும். இந்த தேசிய அரசாங்க சிந்தனை ஜனாதிபதிக்கு ஓர் புதிய விடயம் அல்ல! பதவியேற்ற பின்னர், ஒருசில தடவைகள் அவர் இதனை திட்டவட்டமாக குறிப்பிட்டது பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலை 2024ம் ஆண்டு முடிவடைவதற்குள் நடாத்தி, மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஓர் ஜனாதிபதியாக வரலாற்றில் இடம் பிடிப்பற்கு அவர் திட்டமிடுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியது அல்ல. 1999 மற்றும் 2005 என அடுத்தடுத்து நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தல்களில், இரண்டு தீர்க்கமான காரணங்களினால் தோல்வியை தழுவியவர் ரணில் விக்கிரமசிங்க.

1999 ஜனாதிபதி தேர்தலில், பிரசாரத்துக்கான இறுதி நாளில், அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவை குறி வைத்து, தமிழீழ விடுலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் மயிரிழையில் அவர் உயிர் தப்பிய போது, ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதிக் கனவு உடைந்து சிதறியது!

மீண்டும் 2005ல், அவர் ஜனாதிபதி தேர்தலில் பிரகாசமான வெற்றிவாய்ப்போடு களத்தில் நின்ற வேளையில், விடுதலைப்புலிகள் அறிவித்த தேர்தல் பகிஷ்கரிப்பு, வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை வீணாக்கி, கைக்கெட்டிய தூரத்தில் இருந்த அவரது வெற்றியை தூரத்துக் கனவாக தொலைந்துபோக வைத்தது!

ஆனாலும், அரசியலில் எதுவும், எப்படியும் நிகழலாம் என்ற எழுதப்படாத விதியை நிரூபிக்கும் விதத்தில், கடந்த ஆண்டு பாராளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஜனாதிபதி கதிரையில் ரணில் அமர்ந்து கொண்டார். இந்த அரசியல் ஆச்சரியத்தின் கதாநாயகன், நேரடித் தேர்தல் மூலம் மீண்டும் ஜனாதிபதி ஆகிவிட இப்போது துடிப்பதை புரிந்து கொள்ள முடியும். அதே நேரத்தில், இந்த இலக்கை அடைவதற்கு ரணில் கையாளும் அரசியல் யுக்தி, ஓர் அபாரமான அரசியல் இரா ஜதந்திரம் என்பதையும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஆயினும்,இவை எல்லாம், நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட ஓர் அரசியற் தலைவரின் தனிப்பட்ட அபிலாசைகளை மையமாகக் கொண்ட நிகழ்ச்சி நிரல் மட்டுமே!

இந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே தமிழ்க் கட்சிகளுக்கு இப்பொழுது ரணில் வலை விரிக்கின்றார். ஆனால், தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்திருக்கும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் இந்த வலைக்குள் சிக்கமாட்டாது என்று அடித்துக் கூற முடியும்.

அமைச்சுப் பதவியை ஏற்று கொள்வது பற்றி, சமீபகாலத்தில் இரண்டு தடவைகளுக்கு குறையாமல், பகிரங்கமாக பிரஸ்தாபித்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கட்சியும் இதில் அடங்கும் - அடங்கியே ஆக வேண்டும். தமிழ் மாநிலத்தின் அரசியல் யதார்த்தம் அதனை நிர்ப்பந்திக்கின்றது.

தமிழ் மக்களின் இருப்பையும் தனித்துவத்தையும் சவாலுக்கு உள்ளாக்கும் விதத்தில், அரசாங்கத்தின் உறுப்புக்களான தொல்லியல் துறையும், வனத்துறையும், வனஜீவராசிகள் துறையும் ஒரு புறமாகவும், அகிம்சையை போதிக்கும் புத்த மதத்தின் பிரதிநிதிகளாக தம்மை பிரகடனம் செய்து கொண்டு, இந்து ஆலயங்களை துவம்சம் செய்யும் விதத்தில், அராஜக வழியில் செயற்படும் பௌத்த பிக்குகள் பலர் மறுபுறமாகவும், தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்கள பேரினவாத ஈட்டிகளை அடிக்கடி பாய்ச்சி வருகின்ற நிலைமை நீடித்து நிற்கையில், படைத்துறையின் பாதுகாப்போடு புத்தரின் சிலைகள் முளைப்பதும், விகாரைகள் தோன்றுவதும் தொடர்கதையாகி விட்டிருக்கையில், ஜனாதிபதியின் இனப்பிரச்சனை தீர்வுப் பேச்சும் தேசிய அரசாங்கம் பற்றிய முன்மொழிவும் வெறும் அலங்கார வார்த்தைகளாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படும்.

தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் கூட, இதே மனநிலையில் தான் இன்று உள்ளனர்.

சிறுபான்மை சமூகங்கள் எனக் கூறப்படும் தமிழ், முஸ்லிம் இனங்களை பௌத்த சிங்கள பேரினவாதம், துன்புறுத்துவதிலும் தொல்லை கொடுப்பதிலும், தடையேதுமின்றி தொடர்ந்து ஈடுபட்டு நிற்கையில், தனது எந்தவொரு அரசியல் அறிவிப்பும் அழைப்பும், சிறுபான்மை மக்களால், குறிப்பாக தமிழ் மக்களால் வரவேற்கப்பட வேண்டும் என ஜனாதிபதி விரும்புகின்றார் என்றால், அவர் முதலில் ஓர் விடயத்தை செய்தாக வேண்டும்.

தமிழ் மாநிலத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் அரசாங்க அதிகாரத்தின் அப்பட்டமான துஷ்பிரயோகத்தின் துணையோடு, தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வரும் சிங்கள பௌத்த பேரினவாத அடாவடித்தனத்துக்கு ஆளாக்கப்பட்டு வரும் அக்கிரம சூழ்நிலைக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைத்திட, அவர் தனது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முன்வர வேண்டும்.

தமிழை தாய் மொழியாக கொண்ட மக்கள் என்ற காரணத்திற்காக, தமிழ் மாநிலத்தில் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை தடுத்து நிறுத்தவும், துடைத்தெறியவும், மனச்சாட்சியின் அடிப்படையில் அவர் உடனடியாக முன்வரவேண்டும்.

சுருக்கமாக சொல்வதானால், தனது நம்பகத்தன்மையை அதாவது, நம்பகத்தகுந்த மனிதர், தான் என்பதை அவர் முதலில் நிரூபிக்க வேண்டும்.

அதனை முதலில் செய்துவிட்டு, இனப்பிரச்சனைத் தீர்வு பற்றியும், தேசிய அரசாங்கம் பற்றியும் அவர் தாராளமாக தொடர்ந்து பேசலாம். தூரச்செல்ல வேண்டாம் என தமிழ் கட்சிகளையும் அவர் கோரலாம்.

**இதனை செய்ய முன்வருவாரா ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க...?**

ஆசிரியர்

# பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் ஆய்வுகூடம், சமையலறை, வாகன தரப்பிடம் பிராந்திய பணிப்பாளரால் திறந்து வைப்பு



பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் PSSP திட்டத்தின் கீழ் மீள் புனரமைப்பு செய்யப்பட்ட வைத்திய ஆய்வுகூடம் மற்றும் சமையலறை என்பன திங்கட்கிழமை (08) திறப்புவிழா செய்யப்பட்டதோடு குறித்த ஆய்வு கூடத்தினை கல்முனை பிராந்தியத்திற்குரிய தனித்துவமானதும் பிரதானதுமான ஆய்வுகூடமாக மாற்றுவதற்கான திட்டயோசனையும் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் அவர்களினால் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் சுகாதார பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
குறித்த ஆய்வு கூடத்திற்கு பிரதேச மக்களினதும், அபிவிருத்தி குழுவினதும் அளப்பரிய பங்களிப்பு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் வைத்தியசாலையின் நலன்விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களாலும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட வாகன தரிப்பிடமும் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி டக்டர் எம்.ஜே நௌபல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் கௌரவ அதிதியாக பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம் பி ஏ வாஜித் அவர்களும் சிறப்பு அதிதிகளாக திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சி.எம். மாஹீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில் மற்றும் சுகாதார பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர்களும் கலந்து கொண்டனர்.

# உள்ளூர் வீதிகளிலும் தலைக்கவசம் அணிய வேண்டியது அவசியம்!

## காரைதீவு போலீஸ் பொறுப்பு அதிகாரி ஜெகத்.



உள்ளூர் வீதிகளிலும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் .இது உங்கள் உயிரை மட்டுமல்ல குடும்பத்தையும் பாதுகாக்கும். இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு காரைதீவு பிரதேச போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் எஸ். ஜெகத் தெரிவித்தார். காரைதீவு பிரதேச போலீஸ் ஆலோசனை சபையின் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் போலீஸ் நிலையத்தில் நடைபெற்றது .

அதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்.. மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தி வந்தால் தயவுதாட்சண்யமின்றி அவர்களையும், வாகனத்தையும் நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டிய நேரிடும்.

அதிர்ஷ்டவசமாக காரைதீவு பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனை மிகவும் அரிதாக இருக்கின்றது. போதைப் பொருளை எனது ஊருக்குள் நுழைய விட்டால் எமது எதிர்காலமே சூனியமாகும் எனவே ஒவ்வொருவரும் சிந்தித்து, இந்த போதை பொருள் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக எங்களுக்கு அறிவிக்கவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

எது எப்படி இருப்பினும் எமது ரோந்து சேவைகளும் எமது சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளும் தொடரும் .அதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பதிலுக்கு ஆலோசனை சபையினரும் சில ஆலோசனைகளை தெரிவித்தார்கள். பாடசாலை மாணவர் மத்தியில் சமாந்தரமாக செல்வது பற்றிய வீதி ஒழுங்கு முறை, போதைப்பொருள் பாவனையின் அபாயம், போன்ற விடயங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடத்த வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பாடசாலை விடுகின்ற வேளையில் கொம்பு சந்தியில் போலீஸ் கண்காணிப்பை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# கிழக்கு மாகாண அமைச்சு செயலாளர்களை சந்தித்த ஆளுநர்



கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களின் விசேட கூட்டம் திங்கட்கிழமை (8) பிற்பகல் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, தற்போதைய திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்புத் திட்டங்கள் பற்றி நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ் ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை ஜூன் 12ஆம் திகதி திறக்கப்படும்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்கு செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர் வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூன் 29 ஆம் திகதி மூடப்படும்

நேற்று (9) செவ்வாய்க்கிழமை கதிர்காமத்தில் மொனராகலை அரசாங்க அதிபர் மற்றும் அம்பாறை அரசாங்க அதிபர் முன்னிலையில் இடம் பெற்ற கூட்டத்தில் மேற்படி முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் மற்றும் காட்டுப்பாதை திறப்பு தொடர்பிலானமுன்னோடிக்கூட்டம் எதிர் வரும் 16ஆம் திகதி பகல் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெறவிருக்கிறது.

# விஷமிகளின் வெறியாட்டம் - புங்குடுதீவு ஆலயத்தில் முற்றாக அழிக்கப்பட்ட புங்கை மரங்கள்...!



புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் சுற்று சூழல் வீதியில் காணப்பட்ட நிழல் தரும் புங்கை மரங்கள் அழிக்கப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (08) இரவு வேளையில் இடம்பெற்றுள்ளது.

சூழகம் அமைப்பினரால் 2021 ஒகஸ்ட் மாதம் 61 புங்கை மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளதுடன், தொடர்ச்சியாக பலமாத காலங்கள் நன்னீர் ஊற்றப்பட்டு செழிப்பாக வளர்க்கப்பட்டுள்ளன.

குறித்த ஆலயத்தின் திருவிழா இடம் பெறுகின்ற காலப்பகுதியில் இவ்வீதியில் அடியார்கள் அடைகின்ற துன்பங்களை கருத்திற்கொண்டும், பசுமையினை உருவாக்கும் நோக்குடனும் சூழகம் அமைப்பினரால்இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி ஆலய வீதியில் காணப்படுகின்ற இந்த மரக்கன்றுகள் சுவர்கள் மற்றும் மதில்கள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தாத வகையில் காணப்படுகின்ற போதிலும் அதனை வேருடன் அழிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த கிராமத்தினை சேர்ந்த சிலரே கடந்த இரண்டு ஆண்டுகளிற்குள் மூன்று தடவைகள் அந்த புங்கைகளை அழிக்கும் முயற்சியினை மேற்கொண்டுள்ளதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

அதனுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடாது, மேலும் நேற்று முன்தினம் இரவு சாராயம் போன்ற மதுபான வகைகளை குடித்து விட்டு புங்கை மரங்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

# சிறந்த எழுத்தாளர் பேனா விருது..!



தீம்புனல் நிறுவனத்தின் 2வது ஆண்டு நிறைவும், விருது வழங்கல் விழாவும் அதன் ஆசிரியர் சூரன் ஏ.ரவிவர்மா தலைமையில் (07) யாழ். பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் இடம்பெற்றபோது, பல வருடங்களாக மருதுவ கட்டுரைகளை தொடராக எழுதிவரும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான சிறந்த எழுத்தாளர் பேனா விருதை இவ்விழாவின் விருந்தினர் சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.பாரதியினால் பாராட்டப்பட்டு அவ் விருதை வழங்கி வைத்தார்.

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

# ஞானம் அற்ற இனவாதி சரத் வீரசேகர..! சைவத்திற்கு சட்டம் தேவையில்லை சிவசேனை தலைவர் காட்டம்



தென்னிலங்கையின், புகழ்பெற்ற இனவாதியான சரத்வீரசேகரவிற்கு மதம் மற்றும் சட்டம் தொடர்பாக போதிய விளக்கம் இல்லை என்பது தெளிவாகத் தெரிவதாக சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு புதிதாக வந்தவர் புத்தர் என்றும் புதிதாக வந்தவர் இயேசு என்றும் புதிதாக வந்தவர் முகமது என தெரிவித்த மறவன்புலவு க. சச்சிதானந்தன் இவர்கள் சார்ந்த வழிபாட்டிடங்களை அமைப்பதற்கு சட்டங்கள் தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக சைவ சமயத்திற்கு சட்டங்கள் அவசியமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இலங்கை சிவபூமி பாம்பையும் வேம்பையும் கல்லையும் மண்ணையும் நீரையும் தீயையும் வானையும் காற்றையும் சிவனாக வழிபடுவோர் சைவர். இயற்கையை, ஐம்பூதங்களை, சிவபெருமானாகக் கொள்வோர் சைவர்.

நாகர்களாய் இயக்கர்களாய் தமிழர்களாய் சைவர்களாய் இலங்கையின் ஆதி குடிகளாய் வாழ்கின்ற மக்களுக்கு இயற்கையே கடவுள். தாயின் கருவறையில் வினைவழிப் பிறந்த மனிதரைக் கடவுளாகத் தமிழர் கொள்வதில்லை, சைவர் கொள்வதில்லை.

புத்தரையும் இயேசுவையும் முகமதுவையும் வழிபாட்டிடங்கள் அமைத்தே வழிபட வேண்டும். சைவர்களுக்கு தமிழர்களுக்கு நிலமே கோயில் நீரே கோயில் காற்றே கோயில் வானமே கோயில் நெருப்பே கோயில். எனவே தமிழர்கள் சைவர்களின் கோயில்கள், அரசுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக் கட்டப்பட்டவை அல்ல. எத்திசைச் செல்லினும் சைவர்களுக்கு அத்திசை கோயிலே என்றும் குறிப்பிட்டள்ளார்.

குறிப்பாக வினை வழி கருவறையில் பிறந்து தெளிவு பெற்றவர்கள் போதித்தவர்கள் வழி வந்த மதங்கள் யாவும் இலங்கைக்கு வந்தேறி மதங்கள் என்றும் சச்சிதானந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்த மதத்தவர் குடியேற்றம், சைவ மக்களின் நிலம் அபகரிப்பு, தொல்லியல் போர்வை, இவை காரணங்களாக அமையத் தான்தோன்றியாக அமைந்த சைவக் கோயில்களின் அருகே புத்த கோயில்களை அமைக்கிறார்கள் சரத்த வீரசேகரர் உள்ளிட்ட புத்த மேலாதிக்க வாதிகள்.

படைத் துறையில் வல்லவராக இருப்பவர், தத்துவத் துறையில் வல்லவராக சட்டத் துறையில் வல்லவராக இருப்பதில்லை என்பதைத் திரு சரத்த வீரசேகரரின் கூற்றுகள் தெளிவாகக் காட்டியுள்ளன.

இவர்கள் கேட்கிறார்கள், தென் இலங்கையில் அமைந்த சைவக் கோயில்கள் சட்டத்துக்குள் அமைந்தனவா? என்றும் சாடியுள்ளார்.

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கு ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கிவைப்பு!



ஆசிரியர் அமரர் ஐயாத்துரை சிவசாமியின் நினைவாக, அவரது புதல்வர் பிரேமானந்தன் சிவசாமி புங்குடுதீவு வைத்தியசாலைக்கு ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றை வாங்குவதற்கான பணத்தை வழங்கியுள்ளார் என புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது.

சூழலியல் மேம்பாட்டு அமைவனம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, சோம சச்சிதானந்தன், கருணாகரன் நாவலன், கருணாகரன் குணாளன் ஆகியோரின் பெரு முயற்சியினால், புங்குதீவு நலன்புரிச் சங்கம் (பிரித்தானியா) ஊடாக இத் திட்டம் கைகூடியுள்ளது.

புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் இலங்கையின் பங்களிப்பும் பாராட்டுதலுக்குரியது. விரைவில் இந்த வாகனம் வடிவமைக்கப்பட்டு பாவனைக்கு வரும் என்பதனை குறித்த சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் பிரேமானந்தன் சிவசாமி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தமது நன்றிகளையும் பாராட்டுதலையும் புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது

# தமிழ்க் கைதிக்கு கொலை மிரட்டல்: லொஹானுக்கு நீதிமன்றின் அதிரடி உத்தரவு..!



அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் பிரவேசித்து தமிழ்க் கைதி ஒருவருக்கு கொலைமிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையை நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது. அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக சஞ்சீவ ஜயசூரிய எதிர்வரும் செப்டம்பர் 14ஆம் திகதி அநுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அங்கிருந்த தமிழக் கைதி ஒருவக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போதே, பிரதான நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

# மட்டு சந்திவெளியில் காணிமாபியா குழுவுடன் பொலிசார் செயற்படுவதாக பொலிசாருக்கு எதிராக பொதுமக்கள் சிரேஸ்ட பொலிஸ் காரியாலயத்தில் முறைப்பாடு!!









மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் காணி ஒன்றில் 375 குடும்பங்கள் குடியேறி குடியிருந்துவரும் குறித்த காணி தனது என காணி மாபியா குழு ஒன்று சொந்தம் கொண்டாடி பொலிசாரின் அனுசரணையுடன் அத்துமீறி பைக்கோ வாகனம் கொண்டு உள்நுழைந்து குடிசைகளை உடைத்து குடிசைகளுக்கு தீயிட்டு அட்டகாசம் செய்துவருதாக பொலிசாருக்கு எதிராக திங்கட்கிழமை (08) பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்று திரண்டு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் காரியாலயத்தினை முற்றுகையிட்டு முறைப்பாடு செய்துள்ளனர். குறித்த பொலிஸ் பிரிவிலுள்ள பாலையடி தோணா என்ற பிரதேசத்திலுள்ள அரச காணியில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த காணி இல்லாத வறிய மக்கள் கடந்த 4 வருடத்திற்கு முன்னர் காடுகளை துப்பரவு செய்து ஒருவருக்கு 10 பேச் என்ற அடிப்படையில் 375 குடும்பங்கள் குடிசையடைத்து குறியேறி பயிர் செய்கை செய்துவருகின்றனர்.

இந்த நிலையில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த கோவில் பூசாரி மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் உட்பட 4 பேர் கொண்ட காணி மாபிய குழுவினர் கடந்த மாதம் குறித்த காணிக்குள் உள்நுழைந்து தங்களது காணி எனவும் எல்லோரும் காணியில் இருந்து வெளியேறவேண்டும் என அச்சுறுத்தியதையடுத்து பொலிசாரிடம் முறைப்பாட்டடையடுத்து நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காணி மாபியா குழுவினர் அங்கு சென்று குடியிருப்பாளர்களுடன் வாக்குவாத்தில் ஈடுபடுவதும் வேலிகளை உடைப்பதும் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் அவர்களுக்காக குரல் கொடுத்துவந்த ஒருவருக்கு பொலிசார் கஞ்சாவை வைத்து அவரை கைது செய்துள்ளதாகவும்

காணி மாபியாக்கள் பொலிசாருடன் சேர்ந்து குடியிருப்புக்குள் பெக்கோ வாகனம் கொண்டு வேலிகள் குடிசைகளை உடைத்துள்ளதாகவும் சில குடிசைகளுக்கு தீ வைத்து எரித்துள்ளதாகவும் குடிசை ஒன்றை பொலிசார் பிடுங்கி எடுத்துக் கொண்டு அந்த குடிசையமைத்த பெண்கை கைது செய்து கொண்டு சென்று போன்ற பல்வேறு அநீதிகளை காணி மாபியா குழுவுடன் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வாறு நீதியை கடைபிடிக்க வேண்டிய பொலிசார் காணிமாபியா குழுவிடம் சந்திவெளி பொலிசார் பணத்தை பெற்று அநீதியாக ஒருபக்க சார்பாக இந்த எழை வறிய மக்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். எனவே இந்த பொலிஸ் நிலைய பொலிசாரின் அடாவடிக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்று திரண்டு மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தினை முற்றுகையிட்டு சந்திவெளி பொலிசாரினால் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அடாவடித்தனம் தொடர்பாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்தனர்.

இனையடுத்து உடனடியாக குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை பொலிஸ் அத்தியட்சகர் தொடர்பு கொண்டு நீதியாக செயற்படுமாறு அத்துமீறி குடிசைகளை எரித்த காணி மாபியா குழுவினரை கைது செய்யுமாறு கட்டளையிட்டதையடுத்து அங்கிருந்து மக்கள் வெளியேறினர்.

## தொடர்ந்து வேட்டையாடப்படும்...

நாடாளுமன்றில் நேற்று (09.05.2023) உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அதிகாரக் கரங்களினால் வலிந்து பறித்தெடுத்து, அந்நிலங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன.

இராணுவ முகாம்களை கட்டமைத்தல், சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குதல், சீனா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவற்றை வழங்குதல் என்பவற்றின் ஊடாக, தமிழ்மக்களின் குடிப்பரம்பலை அடியோடு அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை உள்ளிட்ட மேலும் பல மாவட்டங்களில் சைவ ஆலையங்கள் அழிக்கப்பட்டு புத்த விகாரைகள் கட்டப்புடுள்ளதாகவும் அதனை திகதி வாரியாக ஆவணப்படுத்தி இன்று சபையில் சி.சிறீதரன் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் இனப்படுகொலையை...

நேற்று காலை 8:30 மணியளவில் ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து மே 15ஆம் திகதிவரை வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்திருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று முந்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இதனை தெரிவித்தனர்.

அதன் ஆரம்பகட்ட நிகழ்வாக நேற்றைய தினம் வல்வெட்டித்துறை ஆலடி பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுப்பதே இதன் நோக்கமாக கருதப்படுகிறது.

வடகிழக்கு தழுவியரீதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகத்தின் ஆரம்பநாளான நேற்று தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு முன்பாக கல்லூரியின் மாணவர்களினை மையப்படுத்தி முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டுபிரசுரமும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிப்பிற்கான அரிசி குறித்த பகுதியில் அமைந்துள்ள இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பல்கலைக்கழக மாணவர்களினால் சேகரிக்கப்பட்டு கஞ்சி தயாரிக்கப்பட்டு ,இனப்படுகொலைக்குள்ளாகி உயிர்நீத்த உறவுகளிற்காக சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றினை புலப்படுத்த அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்லுமுகமாக தயாரிக்கப்பட்ட துண்டுபிரசுமும் வழங்கப்பட்டது.

இதன் பொழுது அதிகளவான பொதுமக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தலைவர் பிரபாகரனின் வழியி...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனும் தனி வழிதான். அவரது வழியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தனி வழிதான் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தாவது, பல்வேறுபட்ட தரப்புக்கள் நினைவேந்தல்களைக் கைப்பற்ற வேண்டும் என்கின்றனர். அவர்கள் முதலில் நாடாளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களைக் கைப்பற்றட்டும். பின்னர் நினைவேந்தல்களைக் கைப்பற்றலாம்.

இதுகுறித்து இனத்துக்காகப் போராடிய போராளிகள், பாதிக்கப்பட்ட தரப்புக்கள் அமைதியாக இருக்கையில் எங்கேயோ இருந்த தரப்புக்கள் துள்ளிக்குதிக்கின்றன.

இதன்போது தியாக தீபம் திலீபன், அன்னை பூபதி நினைவேந்தல்களில் கடந்த காலங்களில் குழப்பங்கள் ஏற்பட்டன. அவ்வாறு இல்லாமல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒற்றுமையாக மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு யாரும் தனிவாத்தியம் இசைக்காதீர்கள் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உப தலைவர் தர்சன் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் வினவிய போது, ”நினைவேந்தல்களைக் கைப்பற்றுவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் சொல்லவில்லை.

2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இருந்ததைப் போன்றுதான் பல்கலைக்கழக சமூகம் இப்போதும் செயற்படுகின்றதா? ஊடக சந்திப்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னர் எங்களுடன் அது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடியிருக்க வேண்டும்.

மேலும், ஒற்றையாட்சிக்குள் வரலாறுகளையும் தியாகங்களையும் முடக்க வேண்டும் என்கின்ற இந்தியா மற்றும் இலங்கையினது உயர்ந்த நிலையில் இருப்பவர்களிடம் சுயமரியாதையை இழந்து அண்டிப் பிழைக்கும் நபர்களே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடமிருந்து நினைவேந்தல்களைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

## இலங்கைத் தமிழரசுக் கட்சியு...

மாகாணங்களின் தமிழ் எம்.பிக்களை ஒரே நேரத்தில் சந்திக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண எம்.பிக்களை அழைக்காமல் வடக்கு எம்.பிக்களை மாத்திரம் ஜனாதிபதி சந்திக்க முன்னர் ஏற்பாடாகியிருந்தது. ஆனால், நேற்றைய சந்திப்பில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதையடுத்து அந்த முடிவை ஜனாதிபதி மாற்றியுள்ளார்.

நேற்று பிற்பகல் 3.30 மணி முதல் 4.30 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோருடன் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கலந்து கொண்டார்.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்...

ஈடுபட்டனர். சாவகச்சேரி சந்தை கட்டிட தொகுதியின் மேல் தங்கியுள்ள இராணுவத்தினரே இவ்வாறு இராணுவ சீருடை மற்றும் சிவிலுடையுடன் புகைப்படமெடுத்து அச்சுறுத்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தமிழீழ கோரிக்கைக்கு முழுக்கு...

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் (09.05.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ”வடக்கு - கிழக்கைக் குறிவைத்து புராதன சைவ ஆலயங்களை உடைத்தும், நீதிமன்ற உத்தரவுகளை மீறியும் தான்தோன்றித்தனமாகவும் தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்தும் அவற்றில் விகாரைகளைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாகச் சிங்களக் குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

போருக்குப் பின்னர் அம்பாந்தோட்டை உட்பட தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள மக்களை வவுனியர், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள். OO கிழக்கில் ஏற்கனவே மிகப் பெரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய சிங்களப் பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டது. இப்போது வடக்கு மாகாணத்தில் அவை முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசுகளின் நோக்கமாக இருக்கின்றது.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயக பூமியான வடக்கு - கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் எங்கே செல்வது?

மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்தச் சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கைத் தமிழரசுக் கட்சியு...

தெரிவித்துள்ளார். தன்னுடன் இருந்த போது தனக்கு பல தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும், “இன்று வீட்டுக்கு சென்றால் கதை முடிந்துவிடும்” என்று கூறிவிட்டு ஓடி சென்று குதித்துவிட்டதாக சந்தேகநபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சந்தேகநபரின் வாக்குமூலத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், பல பிரிவுகள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிக்கடுவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போதே சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரது புகைப்படத்தை சமூக ஊடகங்களில் வெளியிட்ட பின்னர், சந்தேக நபர் குறித்த ஹோட்டலில் தங்கியிருப்பதாக தனியார் உளவாளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் வழங்கிய பணிப்புரையின் பிரகாரம் சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் பல உத்திகளை கையாண்டுள்ளனர்.

அதற்கமைய, சந்தேக நபர் ஹிக்கடுவையில் இருந்து வாடகை அடிப்படையில் கார் ஒன்றைப் பெறுவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தபோது, பொலிஸார் ஒரு உளவாளியை நியமித்து வாடகைக்கு காரைக் கொடுத்துள்ளனர். அந்த கார் மூலம் காலி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, வீதித் தடையினால் வாகனம் நிறுத்தப்பட்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் விசேட பொலிஸ் பாதுகாப்பின் கீழ் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் தலையீட்டில் சந்தேகநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சந்தேக நபரும் படகில் நாட்டை விட்டு தப்பிச் செல்ல தயாராகி இருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவருக்கு இரண்டு முறை திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். அவர் சில நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் நண்பர் மற்றும் அவரது காதலியின் உதவியுடன் குறித்த விடுதிக்கு பாடசாலை மாணவியுடன் சென்றதாக அவர் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள மற்றுமொரு யுவதியின் அடையாள அட்டையை காட்டி ஹோட்டலில் இரண்டு அறைகளை பெற்றுக் கொண்டதாகவும், அதன் பின்னர் நால்வரும் மது அருந்தியதாகவும் பிரதான சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார்.

அப்போது உயிரிழந்த மாணவியின் நண்பரும், காதலரும் விடுதியை விட்டு வெளியேறியுள்ளனர். போதையில் அமைதியின்றி நடந்து கொண்டதாகவும், பின்னர் மேல் மாடியில் இருந்து குதித்ததாகவும் சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அவரது வாக்குமூலங்கள் சந்தேகத்திற்குரியதாக இருப்பதால், சந்தேக நபர் ஏற்கனவே தெற்கு களுத்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி 48 மணி நேர காவலில் வைக்க உத்தரவிட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

CREATIVE DESIGNER
every design has a story
விளம்பரத் தொடர்புகளுக்கு
+94 77 3828 594

# கிணற்றில் விழுந்து இரண்டரை வயதுக் குழந்தை உயிரிழப்பு! யாழில் சோகம்



நேற்றையதினம், இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, இளவாலை- வசந்துபுரம் பகுதியில் இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று கிணற்றினுள் விழுந்து உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தந்தை வேலைக்கு சென்ற நிலையில் தாயார் சமையல் வேலைகளை செய்துகொண்டிருந்தார், இதன்போது அருகில் உள்ள வீட்டு கிணற்றினுள் குழந்தை விழுந்துள்ளது. இதன்போது குழந்தை மீட்கப்பட்டு தெல்லிப் பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை, குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கருணாநிதி ரக்ஸிகா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

# கூடாராம் போட்டு போராட்டத்தில் ஈடுபடும் மணல் மாபியாக்கள்..! பௌத்த பிக்குவும் ஆதரவு!

மன்னார் மாவட்டம் முழுவதும் பல பகுதிகளில் அனுமதி இன்றியும், அனுமதிக்கு அதிகமாகவும், அனுமதி வழங்கிய பகுதியில் இருந்து வேறு இடத்திலும் மணல் அகழ்வில் ஈடுபட்ட மணல் மாபியா கும்பல் ஒன்று நேற்றைய தினம் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் அனுமதி இன்றி காடுகளை அழித்து மணல் அகழ்வில் ஈடுபட்டதுடன் மாந்தை பிரதேச செயலாளருடன் முரண்பாட்டில் ஈடுபட்ட நபரின் தலைமையிலே குறித்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இடம் பெற்றுள்ளது.

மன்னார் பிரதேச செயலகத்திற்கு முன்பாக டிப்பர் வாகனங்களை நிறுத்தி கூடாரம் அமைத்து குறித்த குழுவினர் போராட்டம் மேற்கொண்டு வருகின்ற நிலையில் பிரதேச செயலாளரும் குறித்த போராட்ட காரர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் காணப்படுவதாக சந்தேகம் எழுகின்றது.



அரச சேவைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் குறித்த குழு கூடாரம் அமைத்து பிரதேச செயலக நுழைவாயில்களுக்கு முன்பாக டிப்பர் வாகனங்களை நிறுத்தி போராட்டம் மேற்கொண்டாலும் பிரதேச செயலாளர் எந்த ஒரு முறைப்பாட்டையும் பொலிஸாரிடம் பதிவு செய்யவில்லை.

மேலும் முருங்கன் விகாராதி பதியும் மணல் மாபியாக்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற
# இலங்கையர்கள் நாட்டுக்கு வருகை!



சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற 41 இலங்கையர்கள், அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் நாடு கடத்தப்பட்டு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் நாடு கடத்தப்பட்ட குறித்த 41 பேரும், நேற்று (செவ்வாக்கிழமை) காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் மீன்பிடி இழுவை படகுகளில் கடல் வழியாக பயணம் செய்து அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சித்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவுஸ்திரேலிய எல்லையில் வைத்து, கைது செய்யப்பட்ட இவர்கள், நாடு கடத்தப்படாமல் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய தேசிய புலனாய்வு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர், சந்தேகநபர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தட்டமையும் குறிப்பிடத்தக்கது,.

# 92,000 இலங்கையர்கள் அகதிகளாக தமிழகத்தில் இருகின்றனர் - அலி சப்ரி

அகதிகளாகப் பதிவு செய்து 92,000க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது தமிழ் நாட்டில் தங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், 92 ஆயிரத்து 435 இலங்கையர்கள் அகதி முகாம்களுக்கு உள்ளோ அல்லது அதற்கு வெளியேயோ தமிழ் நாட்டில் தங்கியுள்ளனர் என்றார். தமிழகத்தில் தற்போது மொத்தம் 106 அகதிகள் முகாம்கள் இயங்கி வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தமிழக அகதிகள் முகாம்களில் தற்போது 19,046 குடும்பங்களைச் சேர்ந்த 58,435 நபர்கள் தங்கியிருப்பதாக அமைச்சர் உறுதிப்படுத்தினார்.



சுமார் 10,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 34,000 இலங்கையர்களும் மாநிலத்தில் வேறு இடங்களில் வசித்து வருவதாக அவர் கூறினார்.

இதேவேளை உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் பெருமளவான இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.








# ஆர்மேனிய இனஅழிப்பை அங்கீகரித்த சர்வதேசம்!
## ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன் ?

ஆர்மேனிய மக்கள் மீது நடந்தேறிய இன அழிப்பின் நினைவு நிகழ்வுகள் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 24ஆம் நாளன்று நடாத்தப்பட்டு வருகின்றது.

**ஆர்மேனிய இன அழிப்பு :**

ஆர்மேனிய இன அழிப்புக்கும் ஈழத்தில் இறுதியாக நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் இனஅழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இரண்டும் இன அடிப்படையிலான குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது தெட்டத் தெளிவாக தெரிகிறது.

ஆர்மேனிய இனஅழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாளன்று ஒட்டோமன் துருக்கியர்கள், ஆர்மேனிய மக்களை சுற்றி வளைத்துக் மேற்கொள்ளப்பட்ட படுகொலையோடு தொடங்கிய இனஅழிப்பு, ஒட்டுமொத்தமாக 15 இலட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக நடந்தேறிய ஓர் வரலாற்று கொடூரமாகும்.

ஆர்மேனியாவிலும், ஈழத்தில் தமிழர் மீதான இனப்படுகொலைகள் திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட பின்னரும், இற்றைவரை துருக்கி இந்த கொடூர பாதக செயலுக்கு பொறுப்புக் கூற இல்லை. அத்துடன் அதனை ஏற்றுக் கொள்ளவும் இல்லை என்பதே மிகவும் கண்டனத்துக்கு உரியதாகும்.

ஆர்மேனிய இன அழிப்புக்கும் ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இந்த இரு நிகழ்வுகளிலும் இன அடிப்படையிலான எழுந்த குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

**கூட்டுத் தண்டனையா இனஅழிப்பு ?**

இக் கோரமிகு குற்றங்களை புரிந்தவர்கள், போரினால்தான் இக்கொலைகள் இடம்பெற்றன எனக் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றார்கள். அத்துடன், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் இவை தவிர்க்க முடியாதவை எனக் கூறி நியாயப்படுத்தவும் முயல்கின்றார்கள். இரு தேசத்திளிலும் இன அழிப்பானது கூட்டுத் தண்டனையாக பாரிய அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆர்மேனிய மக்களுக்கு துருக்கியர்






களால் இழைக்கப்பட்டது இனஅழிப்பு என்பதை இன்று உலகில் 20 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆயினும் ஒட்டோமான் பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த துருக்கிக் குடியரசு இந்நிகழ்வை இனப்படுகொலை எனக் கூறுவதை மறுத்து வருகிறது.

அண்மைக் காலத்தில், இந்த இனப் படுகொலைகளை அங்கீகரிக்கப் பல நாடுகளும் அமைப்புகளும் துருக்கியைக் கோரி வருகின்றன. இது வரையில் 20 நாடுகள் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் இனப்படுகொலைகளே என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.




இருபதாம் நூற்றாண்டில் நடந்த இனப் படுகொலையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 29 அக்டோபர் 2019 அன்று ஏற்றுக்கொண்டது.

துருக்கியின் பேரரசு தன் படைபலத்தால் ஆர்மேனிய மக்களைக் கொன்றது இனப்படுகொலையே என்று பல நாடுகள் தீர்மானம் நிறைவேற்றினாலும், துருக்கி அரசு ஆர்மேனிய இனப்படுகொலைக்கு எச்சான்றும் இல்லை என மறுத்துள்ளது.

ஆர்மேனியாவில் நிகழ்ந்தது இனப் படுகொலை என்பதை ஏற்றுக் கொள்ளுமாறு துருக்கி நாட்டைக் கோரும் தீர்மானம் ஒன்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**ஈழத்தமிழர் இனப்படுகொலை :**

2009 போர் முடிவின் பின்னர் இலங்கையில் தமிழினத்தின் மீது நடைபெற்றது இனஅழிப்பு அல்ல என்பதனை நிலைநாட்ட சில சர்வதேச சக்திகள் முனைந்து வருகின்றன.

ஆயினும் உலகத் தமிழ் மக்கள் ஈழத்தில் நடந்தது இன அழிப்பே என்பதில் உறுதியாக உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு உலக நாடுகள் செயலாற்ற வேண்டும்.

**புலம்பெயர் ஆர்மேனிய மக்கள் சக்தி:**

ஆர்மேனியாவிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் புலம்பெயர் மக்களின் மன உறுதியினாலும் இடைவிடா முனைப்புக்களினாலும் இன்று அவர்களிடத்தில் பல நிறுவனங்கள், பல கலைக் கழகங்கள், ஆலோசனைக் கூடங்கள், ஊடகங்கள் எனப பலவும் இயங்கி வருகின்றன.

கொடூரமான இனவழிப்பின் பின் ஆர்மேனிய மக்களை உலகெங்கும் புலம்பெயர வைத்தது.

புலம்பெயர்ந்த ஆர்மேனிய மக்கள், உலகில் பலம் வாய்ந்த புலம்பெயர்ந்த சமூகக் கட்டமைப்புகளில் முக்கியமான தரப்பாகும்.

அவர்கள் தனித்து உணர்வுரீதியான செயற்பாடுகளுடன் மட்டும் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவில்லை.

**சோவியத்தில் ஆர்மேனிய தேச உருவாக்கம் :**

சோவியத் ஒன்றிய காலத்திலேயே ஆர்மேனிய தேச உருவாக்கத்தில் சொந்த நிகழ்ச்சி நிரலில் நேர்த்தியான நிர்வாக முகாமைத்துவத்தோடு தமக்குரிய செயற்திட்டங்களை முன்னெடுத்து வந்தார்கள்.

சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் ஆர்மேனியா தன் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அடைந்துள்ளது. ஆயினும் ஆர்மேனிய மக்கள் துருக்கியால் நிகழ்த்தப்பட்ட இக்கொடிய அநீதி இனி ஒரு போதும் நடைபெறாமல் தடுப்பதற்கும் வழி வகுத்து, தமது உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் கூறியது போல "ஒரு கொடுமையை மறைப்பது அல்லது மறுப்பது என்பது, காயம் ஒன்றிலிருந்து இரத்தம் ஓடுவதைத் தடுப்பதற்கு கட்டுப்போடாமல் இருப்பதை ஒத்தது" என்ற கூற்று ஆர்மேனிய மக்களுக்கும் ஈழத்தமிழர்க்கும் மிகவும் பொருத்தமாகும்.

இன்றைய உலகில் பல நாடுகள் ஆர்மேனிய இனஅழிப்பை அங்கீகரித்து உள்ளன. ஆயினும் சர்வதேசம் ஈழத்தமிழர் இனப்படு கொலையை ஏற்க மறுப்பது ஏன் என் பது தமிழ் மக்களை மாற்றாந் தாய் மனப்பாங்குடன் புறக்கணிப்பது போல தென்படுகிறது.

ஐங்கரன்
விக்கினேஸ்வரா